# TAMIL NADU POLICE HOUSING CORPORATION LTD.

(ISO 9001:2000 CERTIFIED COMPANY)

QUARTERLY BULLETIN ISSUE NO. 2 APR - JUN 2007



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 17.06.2007 அன்று திருநெல்வேலியில், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் கீழ்கண்ட இடங்களில் கட்டப்பட்டுள்ள காவலர் குடியிருப்புகளை திறந்து வைத்தார்கள்.

1) மேலப்பாளையம் - 1 ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர் மற்றும் 48 காவலர் / தலைமை காவலர் குடியிருப்புகள் - ரூ.188.82 இலட்சங்கள்
2) சிந்துபூந்துறை - 24 காவலர் / தலைமை காவலர் குடியிருப்புகள் - ரூ. 87.34 இலட்சங்கள்
3) பாளையங்கோட்டை - 3 ஆய்வாளர் மற்றும் 6 உதவி ஆய்வாளர் குடியிருப்புகள் - ரூ. 42.11 இலட்சங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையினருக்காக தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் கீழ்கண்ட இடங்களில் கட்டப்படவிருக்கும் குடியிருப்புகளுக்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

1) பாளையங்கோட்டை - 1 துணை சிறை அலுவலர், 1 முதல் தலைமை சிறைக்காவலர் மற்றும் 48 சிறைக்காவலர் குடியிருப்புகள் - ரூ. 236.58 இலட்சங்கள்
2) பேட்டை - 1 தீயணைப்பு நிலைய அலுவலர், 15 தீயணைப்பு படைவீரர் குடியிருப்புகள் - ரூ. 79.38 இலட்சங்கள்

The Honourable Chief Minister of Tamil Nadu, inaugurated police quarters constructed by the TNPHC Ltd at the following places in Tirunelveli on 17.06.07.

1) 1 Inspector's, 2 SI's and 48 PC's/HC's quarters at Melapalayam - Rs. 188.82 lakhs
2) 24 PC's/HC's quarters at Sindhupoondurai - Rs. 87.34 lakhs
3) 3 Inspector's and 6 SI's quarters at Palayamkottai - Rs. 42.11 lakhs

The Honourable Chief Minister also laid the foundation stone for the quarters proposed to be constructed by the TNPHC for Prison and Fire and Rescue Service Departments at the following places.

1) Construction of 1 Deputy Jailor's, 1 Chief Warder's and 48 Warder's quarters at Palayamkottai at a cost of - Rs.236.58 lakhs
2) Construction of 1 Fire Officer's and 15 Fire Men's quarters at Pettai at a cost of - Rs. 79.38 lakhs



**Melapalayam Rs. 188.82 lakhs**



**Sindhupoondurai Rs. 87.34 lakhs**



**Palayamkottai Rs. 42.11 lakhs**

## காவல் துறை மேம்பாட்டுக்கு பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு-முதல்வர் அறிவிப்பு

2007-2008 ஆண்டிற்கான நிதிநிலை தொடரில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அவையில் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக்கழகத்திற்கு தொடர்புள்ள திட்டங்கள்

1) தூத்துக்குடி மாவட்டத்தில் பேரூரணியில் உள்ள பயிற்சி பள்ளியின் தரம் 400 லிருந்து 600 ஆக உயர்த்துதல் - ரூ. 4.380 கோடி
2) 2000 காவலர் குடியிருப்புகள் - ரூ. 110.000 கோடி
3) புதிய மறு அஞ்சல் தொலை தொடர்பு நிலைய கட்டிடம், மன்னார்குடி - ரூ. 0.150 கோடி
4) நுண்ணலை தொலை தொடர்பு கட்டிடம், கிருஷ்ணகிரி - ரூ. 0.950 கோடி
5) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், சேலம் - ரூ. 3.500 கோடி
6) மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், திருவாரூர் - ரூ. 3.440 கோடி
7) 13 காவல் நிலையங்கள் - ரூ. 2.794 கோடி

## குவியும் பாராட்டுக்கள்! குளிரும் நெஞ்சங்கள்!

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் வெளியிட்ட முதல் காலாண்டுச் சிற்றறிக்கை பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இச்சிற்றறிக்கையினை பாராட்டி எழுதியவர்களில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. எம்.கே நாராயணன், தமிழக அரசின் உள்துறை செயலர் திருமதி. எஸ். மாலதி, தமிழக மற்றும் இதர மாநில காவல்துறை இயக்குனர்கள் மற்றும் பல காவல்துறை உயர் அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோரும் அடங்குவர்.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் வியக்கதக்க சாதனைகளைப் பாராட்டியும், கழகம் மேலும் விரைவாக வளர்ச்சியடைந்து வலுவுடன் செயல்பட தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள். தமிழக உள்துறை செயலர் பல பயனுள்ள ஆலோசனைகளை கூறியிருந்தார்கள். அவற்றுள் கழகத்தின் செய்திக் குறிப்பினை இணையதளத்தில் வெளியிடலாம் என்பது போன்ற கருத்துக்கள் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் செய்திக் குறிப்பின் தரத்தை பாராட்டியும், அதன் தரத்தை மேலும் உயர்த்த தங்களது கருத்துக்களை தெரிவித்து எங்களுக்கு எழுதியிருந்த உயர் அதிகாரிகளுக்கு இக்கழகம் தனது ஆழ்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறது.

## CM ANNOUNCES FUND ALLOCATIONS FOR UPGRADATION OF TN POLICE FORCE

The Honourable Chief Minister of Tamil Nadu made the following announcements on the floor of the house during the budget session 2007 - 08 in respect of activities related to TNPHC Ltd.

1) Upgradation of Police Training School at Perurani in Thoothukudi District from 400 to 600 personnel - Rs.4.380cr.
2) 2000 Police quarters -Rs.110.000cr.
3) New Repeater Station at Mannargudi - Rs. 0.150cr.
4) Micro wave communication building at Krishnagiri - Rs. 0.950cr.
5) DPO complex at Salem -Rs. 3.500cr.
6) DPO complex at Thiruvarur -Rs. 3.440cr.
7) 13 Police Stations - Rs. 2.794cr.

## BOUQUETS FOR THE BULLETIN

The first issue of the bulletin brought out by the TNPHC received an overwhelming response. Those who wrote included Tr. M.K. Narayanan, National Security Advisor, Tmt. S. Malathi, Home Secretary, Government of Tamil Nadu, Director Generals of Police from the State as well as from other States and a host of senior Police officers, Collectors etc., to whom the bulletin was sent.

The National Security Advisor commended the TNPHC for its remarkable achievements and gave his blessings for its rapid growth from 'strength to strength'. The Home Secretary, Tamil Nadu gave a number of useful suggestions some of which, like putting the bulletin on the website (www.tnphc.com), have already been implemented. In fact, the TNPHC is extremely grateful to all the officers who took out time to write, complimenting us for the overall quality of the bulletin and also gave several suggestions for increasing the usefulness of the bulletin.

எங்களது செயல்திட்டங்கள் மற்றும் காலாண்டு சிற்றறிக்கை மேம்பட்ட முறையில் பயனாளிகளிடம் சென்றடைய முயற்சிப்போம் என உறுதி கூறுகிறோம். எங்களது இச்சிற்றிக்கைக்கு தங்களது கருத்துக்களை எதிர்நோக்குகிறோம்.

## ஏப்ரல் - ஜூன் 2007 காலாண்டில் முடிக்கப்பட்ட திட்டங்கள்.

**குடியிருப்புகள்**

| மாவட்டம் | குடியிருப்பின் எண்ணிக்கை | குடியிருப்பின் மதிப்பு (ரூ) இலட்சத்தில் |
|---|---|---|
| விழுப்புரம் | 99 | 395.114 |
| வேலூர் | 70 | 271.299 |
| திருவண்ணாமலை | 19 | 71.141 |
| தஞ்சாவூர் | 13 | 57.491 |
| திருச்சி | 15 | 68.649 |
| திருநெல்வேலி | 33 | 129.446 |
| தேனி | 60 | 222.186 |
| நீலகிரி | 20 | 98.394 |
| ஈரோடு | 39 | 157.166 |
| தர்மபுரி | 31 | 112.802 |
| **மொத்தம்** | **399** | **1583.688** |

| **காவல்துறை கட்டிடங்கள்** | **மதிப்பு (ரூ) இலட்சத்தில்** |
|---|---|
| புதுக்கோட்டை மாவட்டத்தில் கணேஷ்நகரில் நகர காவல் நிலையம் | 21.87 |
| திருவண்ணாமலை மாவட்டத்தில் தேசூரில் புறநகர் காவல் நிலையம் | 15.00 |
| சென்னை அசோக் நகரில் காவலர் பயிற்சி கல்லூரியின் நூலகம் புதுப்பித்தல் | 20.00 |
| திண்டுக்கல் நகரம் (வடக்கு) காவல் நிலையம் தரம் உயர்த்துதல் | 4.60 |
| தூத்துக்குடி, முறப்பநாடு காவல் நிலையம் தரம் உயர்த்துதல் | 4.60 |
| திருநெல்வேலி, களக்காடு காவல் நிலையம் தரம் உயர்த்துதல் | 4.60 |

We assure the readers that we will strive to improve the delivery to the consumers in all aspects including the bulletin. We look forward to the response to our present issue.

## SCHEMES COMPLETED DURING THE QUARTER APRIL - JUNE 2007

**Quarters**

| District | No. of Quarters | Cost Rs. In Lakhs |
|---|---|---|
| Villupuram | 99 | 395.114 |
| Vellore | 70 | 271.299 |
| Tiruvannamalai | 19 | 71.141 |
| Thanjavur | 13 | 57.491 |
| Trichy | 15 | 68.649 |
| Tirunelveli | 33 | 129.446 |
| Theni | 60 | 222.186 |
| Nilgris | 20 | 98.394 |
| Erode | 39 | 157.166 |
| Dharmapuri | 31 | 112.802 |
| **Total** | **399** | **1583.688** |

| **Police buildings** | **Cost Rs. in lakhs** |
|---|---|
| Urban police station at Ganesh Nagar, Pudukkottai | - Rs. 21.87 |
| Rural police station at Thesur, Thiruvannamalai District | - Rs. 15.00 |
| Refurbishing of Police Training College library at Ashok Nagar, Chennai | - Rs. 20.00 |
| Upgradation of police station at Dindugul Town (North) | - Rs. 4.60 |
| Upgradation of police station at Muruppanadu, Thoothukudi | - Rs. 4.60 |
| Upgradation of police station at Kalakadu, Tirunelveli | - Rs. 4.60 |

முடிக்கப்பட்ட திட்டங்கள்

## Completed Schemes



20 PC's / HC's quarters at Conoor



60 PC's / HC's quarters at Theni



31 PC's / HC's quarters at Dharmapuri



13 PC's / HC's quarters for Railway Police at Kumbakonam



66 PC's / HC's quarters at Sholingur



A view of Inspesctor's quarters at Sathyamangalam



A view of Sub-Inspector's quarters at Mangalam



PTC Library, Ashok Nagar, Chennai



PC's / HC's quarters at Tindivanam

## நடப்பில் உள்ள பெரிய திட்டங்கள்

### காவலர் பயிற்சிக் கழகம், ஊணமாஞ்சேரி, காஞ்சிபுரம் மாவட்டம்

ஊணமாஞ்சேரியில் 136 ஏக்கர் நில பரப்பில் ரூ. 48.23 கோடி திட்ட மதிப்பீட்டில் காவலர் பயற்சிக் கழகம் கட்டப்பட்டு வருகின்றது. இப்பயிற்சிக் கழகத்தில் அடுத்த பிரிவு உதவி ஆய்வாளர்கள் பயிற்சி இவ்வளாகத்தில் மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

### தடய அறிவியல் ஆய்வுக்கூட கட்டிடம், சென்னை

தடய அறிவியல் ஆய்வுக்கூட கட்டிட வேலைகள் சென்னையில் நடைபெற்று வருகிறது. பல அடுக்குமாடிகளைக் கொண்ட இக்கட்டிடம் 61718 சதுர அடிகள் பரப்பளவு உடையதாகும். இது போன்ற கட்டிடங்களுக்கு தேவைப்படும் கருங்கல்களிலான பரிசோதனை மேடைகள், அரிப்பு தன்மை எதிர்ப்பு கொண்ட தரைகள், போதுமான வேதிப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வைக்கக்கூடிய அறைகள் போன்றவைகள் ஏற்படுத்தப்படும். மேலும் இக்கூடத்தில் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு ஏற்ற சூழல் கொண்டதாக அமையும் வண்ணம் கூடுதல் மின்விளக்குகள் மற்றும் சிறப்பு அம்சங்கள் பொருத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு தொகை ரூ.583.50 இலட்சங்கள் ஆகும்.

## ON GOING MAJOR PROJECTS

### Police Academy at Oonamanchery, Kancheepuram district.

The construction of Police Academy at Oonamanchery on 136 acres at a cost of Rs. 48.23 cr. is in progress. It would be possible to undertake training of the next batch of Sub inspectors at this Academy.

### Forensic Science Lab building at Chennai

The construction of Forensic Science Lab building is in progress. It is a multistoried RCC framed structure with a total plinth area of 61718sqft. Special features would include granite top examination tables, suitable floor finish to resist aggressive environment, adequate shelves to store specimens ,chemicals, sensitive equipments etc., that are essential in this type of building. Additional electrical lightings and special arrangements to create ambient environment for testing labs are also proposed. The cost of this project would be Rs.583.50 lakhs.



Police Academy - Academy Block



Police Academy - Accommodation Block



Forensic building in Progress



Forensic building in Progress

**காவலர் பயிற்சிக் கழக திட்ட பணிகள் தொடர்பாக காவல்துறை இயக்குனர் (பயிற்சி) அவர்களுடன் கலந்துரையாடல்**

**DISCUSSION WITH THE DGP (TRAINING) REGARDING POLICE ACADEMY PROJECT**



துவக்கப்பட உள்ள பெரிய திட்டங்கள்

MAJOR PROJECTS LIKELY TO BE COMMENCED

**சென்னையில் காவல்துறை இயக்குனரது அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடங்கள்**

காவல்துறை இயக்குனரது அலுவலக வளாகத்தில் ரூ. 20.31 கோடியில் 1,71,600 சதுர அடி பரப்பளவில் கட்ட உத்தேசிக்கப்பட்ட கூடுதல் கட்டிடங்களுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் மதிப்புத் தொகைக்கு (Survey Report) அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. இக்கட்டிடங்களை இடிக்கும் பணி ஏலம் மூலமாக ஒப்படைக்கப்பட்டது.

கட்டப்படவிருக்கும் புதிய கட்டிடம் தற்போதுள்ள கட்டிடத்தின் பாரம்பரிய நுண்கலையை ஒத்திருக்கும்படி அமைய உள்ளது.

**சென்னை பெருநகர் காவல்துறை ஆணையருக்கான புதிய அலுவலகம்**

சென்னை பெருநகர் காவல்துறை ஆணையருக்கான புதிய அடுக்குமாடி கட்டிட அலுவலகம் ரூ. 20.65 கோடியில் வேப்பேரியில் 5.5 நிலப்பரப்பில் கட்டப்பட உள்ளது. இதன் பரப்பளவு 1,73,000 சதுர அடியாகும். இப்பணி அங்கு இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் மதிப்புத்தொகை (Survey Report) அரசாங்க ஒப்புதல் பெற்றவுடன் துவக்கப்படும்.

**திருவாரூர், சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்கள்**

திருவாரூர், சேலம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட தலைநகர்களில் தோராயமாக தலா ரூ. 3.50 கோடியில் மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலகங்கள் கட்டும் பணிகள் இவ்வாண்டு மேற்கொள்ளப்படும். இக்கட்டிடங்கள் கட்டுவதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**Additional Blocks in the present Director General of Police office complex, Chennai.**

Action has been initiated to commence the construction of additional blocks in the present DGP's office complex at a cost of Rs.20.31crores. The area proposed to be built is 1,71,600 sqft. Survey report for the buildings to be dismantled was approved by the Government. Agency for dismantling has been fixed through auction.

The new building will be in harmony with the architecture of the present heritage building.

**New office for the Commissioner of Police Greater Chennai.**

The construction of a new multistoreyed building for the Commissioner of Police, Greater Chennai at a cost of Rs.20.65 crores will be commenced after the survey reports are approved. The total builtup area would be 1,73,000 sqft in an extent of 5.5 acres land in Vepery, Chennai.

**District Police Offices at Tiruvarur, Salem and Krishnagiri**

Construction of District Police Offices at district head quarters of Tiruvarur , Salem , and Krishnagiri districts are to be taken up this year at an approximate cost of Rs. 3.50 crores each.

The lands for the construction of DPOs have been identified.

# TYPICAL PLAN OF DISTRICT POLICE OFFICE WITH COMMUNICATION COMPLEX




## SECOND FLOOR PLAN ( AREA - 10287 sq.ft )




## FIRST FLOOR PLAN (AREA - 10287 sq.ft )




## GROUND FLOOR PLAN ( AREA - 10654 sq.ft )

## காவலர் / தலைமை காவலர் குடியிருப்பின் பரிணாமம்

காவலர் / தலைமை காவலர் குடியிருப்பின் வடிவமைப்பு கடந்த 25 ஆண்டுகளில் மாற்றமடைந்துள்ளது. பயனாளிகள் மேலும் திருப்தி அடையும் நோக்கத்துடன், தற்போது பின்பற்றப்படும் வடிவமைப்பில் கூடுதல் பரப்பளவு, சிறப்பான தரை, கூடுதலான பொருட்கள் வைக்கும் இடம், கழிப்பறை மற்றும் அடுப்பறையில் கண்ணாடி ஓடுகள் (Tiles) பதித்தல் போன்ற மேம்பாடுகள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது செயல்படுத்தப்படும் வரைபடம் மற்றும் குடியிருப்பின் உட்புறத்தின் சிறப்பு அம்சங்களில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## EVOLUTION OF PC / HC QUARTERS

The type design for PC / HC quarters has evolved during the past 25 years. The present type design includes several improvements such as increase in plinth area, better flooring, more storage space, use of tiles etc. in the toilets and kitchen to enhance the satisfaction level of the user.

Some illustrations of the plan now been adopted and features within the quarters are given below.






PC's / HC's quarters at Ashok Nagar



PC's / HC's quarters at Mambalam



PC's /HC's quarters at Mambalam Cupboard arrangements



PC's / HC's quarters at Saidapet Kitchen arrangements



PC's / HC's quarters at Mambalam WC and Washbasin arrangements



PC's / HC's quarters at Mambalam Bathroom with tiles

## தமிழ்நாடு சிறப்பு காவல் படை 7வது அணி, போச்சம்பள்ளி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளியில் புதிதாக கட்டப்பட்ட தமிழ்நாடு சிறப்பு காவல்படை 7வது அணிக்கான அலுவலக வளாகம் குறிப்பிடத்தக்கது.

45.65 ஏக்கரில் ஏற்படுத்தப்பட்ட இவ்வளாகம் கீழ்கண்டவற்றினை கொண்டது.

| | சதுர அடி | மதிப்பு (ரூ.) இலட்சங்களில் |
|---|---|---|
| நிர்வாக அலுவலக கட்டிடம் | 23963 | ரூ. 90.17 |
| ஆயுத கிடங்கு | 11357 | ரூ. 68.57 |
| காப்பாளர் அறை | 1270 | ரூ. 7.23 |
| பாதுகாவலர் அறை | 190 | ரூ. 1.76 |
| உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகள் | ---- | ரூ. 83.09 |
| மொத்தம் | 36780 | ரூ. 250.82 |

முட்கம்பி வேலியுடன் கூடிய சுற்றுச்சுவர், தார் சாலைகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் குழாய் மூலம் குடிநீர் வசதி, திறந்தவெளி கிணறு, இரண்டு கண்காணிப்பு கோபுரங்கள், ஆயுத கிடங்கிற்கு மின் பாதுகாப்பு வேலி போன்றவை உட்கட்டமைப்பில் அடங்கும். சீரிய சுற்றுச்சூழல் ஏற்படுத்தும் நோக்கத்துடன் 600 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. நூலகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் விரைவில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்னவற்றை தவிர 88452 சதுர அடி மொத்த பரப்பளவு கொண்ட 161 காவலர் / தலைமை காவலர் குடியிருப்புகள் ரூ. 661.999 இலட்சங்களில் கட்டப்பட்டுள்ளது. மேலும், ரூ. 607.44 இலட்ச மதிப்பீட்டில் தளவாய், துணை தளவாய், 4 உதவி தளவாய்கள், 8 ஆய்வாளர்கள், 18 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 96 காவலர் / தலைமை காவலர்களுக்கான குடியிருப்புகளின் கட்டுமானப்பணிகள் நடை பெற்று வருகிறது.

இவ்வளாகத்தின் தொடர்பான புகைப்படங்கள் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

## TSP VII Battalion at Pochampalli

The newly constructed battalion complex for **'TSP VII Battalion at Pochampalli'** in Krishnagiri district needs special mention.

It has been developed on 45.65 acres and comprises the following:

| | Area in sq. ft | Cost In lakhs |
|---|---|---|
| Administrative Block | 23963 | Rs. 90.17 |
| Bell of Arms | 11357 | Rs. 68.57 |
| Guard Room | 1270 | Rs. 7.23 |
| Sentry Room | 190 | Rs. 1.76 |
| Infrastructure arrangements & development works | ---- | Rs. 83.09 |
| Total | 36780 | Rs. 250.82 |

The infrastructure includes compound wall with barbed wire fencing over it, WBM / BT Roads, piped drinking water supply from TWAD Board, open well, two watch towers and electric security fencing for bell of arms. For an eco friendly environment 600 avenue trees have been planted. A library and a gym are also proposed in the near future.

Besides the above, 161 PC / HC quarters on a total plinth area of 88452 sqft have been constructed at a cost of Rs. 661.999 lakhs. Construction of quarters for one Commandant, One Deputy Commandant, 4 Assistant Commandants, 8 Inspectors, 18 Sub Inspectors and 96 PC / HCs is in progress.The cost of these project would be Rs. 607.44 lakhs.

The photographs on the following page relate to the construction in the complex.

## தமிழ்நாடு சிறப்பு காவல்படை 7வது அணி, போச்சம்பள்ளி

## TSP VII BATTALION AT POCHAMPALLI


Admin. Block


Foyer and Staircase


Bell of Arms


Commandant Room


Toilet


Office Room


Store Room


Conference Hall


161 PC's / HC's quarters

## காவல் ஆணைய உறுப்பினர்களுடன் உரையாடல்

காவல் ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் 14.06.2007 அன்று காவல்துறை இயக்குனர் (பயிற்சி), காவல்துறை இயக்குனர், காவலர் வீட்டு வசதிக் கழகம் மற்றும் உயர் அதிகாரிகள், காவல்துறைக்கான தேவைகள், குறிப்பாக பணி நடைபெற்று வரும் காவல் பயிற்சிக் கழகத்தின் தேவைகள் சம்பந்தமாகவும், அத்திட்ட வளாகமான ஊணமாஞ்சேரியில் விரிவான கலந்துரையாடல் மேற்கொண்டனர்.



Members in Conference

## சிறைத்துறை கட்டிடம் மற்றும் அத்துறையினரின் குடியிருப்புகள்

சிறைத்துறையினருக்கான கட்டிடம் மற்றும் குடியிருப்புகளின் கட்டிடப்பணிகள் வெவ்வேறு நிலையில் உள்ளது.

| | |
|---|---|
| மகளிர் சிறப்பு சிறைச்சாலை, வேலூர் | - 10 |
| மத்திய சிறைச்சாலை, வேலூர் | - 15 |
| மத்திய சிறைச்சாலை, கடலூர் | - 15 |
| மத்திய சிறைச்சாலை, கோவை | - 50 |

கடலூரில் மகளிருக்கான சார்பு சிறைச்சாலைக்கான பணிகள் ரூ. 200 இலட்ச மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. இதைத்தவிர ரூ. 500 இலட்ச மதிப்பீட்டில் 124 குடியிருப்புகளின் கட்டுமான பணிகள் வேலூர், கடலூர், திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றது.

வேலூர், கடலூர், திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் ரூ. 1359.80 இலட்சங்களில் 276 குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## DISCUSSION WITH THE POLICE COMMISSION MEMBERS

The DGP (Training) and the DGP Police Housing along with the senior officers had detailed discussions with the Chairman and Members of the Tamil Nadu Police Commission in connection with the requirements of the Police Department with special reference to the on going construction of Police Academy at the Academy Project site, Oonamanchery on 14.06.2007



Treeplanting by Chairman - Police Commission

## Prison buildings and quarters for Prison staff

Construction of Jail building and quarters for staff of Prison Department under different programmes is under progress at various places:

| | |
|---|---|
| Special Prison for Women, Vellore | -10 |
| Central Prison, Vellore | -15 |
| Central Prison, Cuddalore | -15 |
| Central Prison, Coimbatore | -50 |

Construction of new sub jail for women at Cuddalore at a cost of Rs.200 lakhs is in progress. Besides the jail building, construction of 124 quarters at a cost of Rs. 500 lakhs is in progress at Vellore, Cuddallore, Trichy, Madurai, Palayamkottai, Salem, Coimbatore and Pudukottai.

Sanction for Rs. 1359.80 lakhs has been accorded towards construction of 276 quarters at Vellore, Cuddalore, Trichy, Madurai, Palayamkottai, Salem, Coimbatore, and Pudukottai.

## குன்றத்தூரில் 'உங்கள் சொந்த இல்லம்' திட்டம்

## 'Own Your House Scheme' at Kunrathur



Front view of H1G


A view of the scheme



Front view of MIG


Inner Road


Sullage drain arrangements


PVC Tank for each unit

'உங்கள் சொந்த இல்லம்' திட்டத்தின் கீழ் 4 உயர் வருவாய் பிரிவு (567 சதுர அடி) மற்றும் 16 நடுத்தர வருவாய் பிரிவு (425 சதுர அடி) வீடுகள் காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் ரூ. 103.04 இலட்சங்களில் கட்டப்பட்டது. இதில் மின்வசதிகள், குடிநீர் வசதி, கழிவுநீர் வடிகால், சாலைகள், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள், மரம் வளர்த்தல் போன்ற உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. இவ்வளாகத்தின் முன்பகுதியில் சுற்றுச்சுவரும் ஏனைய பக்க எல்லையில் முட்கம்பி வேலியும் அமைக்கப்பட்டுள்ளது.

Under 'Own Your House Scheme' programme 4 HIG's (567sqft) and 16 MIGs (425sqft) were constructed at Kunrathur, Kancheepuram district at a cost of Rs.103.04 lakhs. All infrastructural facilities like electrical arrangements, water supply, sewerage, sullage drain, road & culverts, rain water harvesting structures, tree plantations, etc. have been provided. Also, compound wall has been constructed in the front and barbed wire fencing provided along the boundary of the land on other sides.

## தீயணைப்பு மற்றும் மீட்பு துறையினருக்கான குடியிருப்புகள்

தீயணைப்பு மற்றும் மீட்பு துறையினருக்கான குடியிருப்புகள் தமிழ்நாடு அரசு அதன் ஆணை (MS) எண் 1026 உள் (காவல் XVII) துறை நாள் 26.10.2006 இல் கீழே கொடுத்துள்ள இடங்களில் ரூ. 988.24 இலட்சங்களில் 200 குடியிருப்புகள் கட்டுவதற்கான நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் அளித்துள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல்லடம், திருப்பூர் மற்றும் உடுமலைப்பேட்டை நகரங்களிலும், ஈரோடு, ராசபாளையம் - விருதுநகர் மாவட்டம், கள்ளக்குறிச்சி - விழுப்புரம் மாவட்டம், பென்னகரம் - தர்மபுரி மாவட்டம், ஆரணி - திருவண்ணாமலை மாவட்டம், பொன்னேரி - திருவள்ளூர் மாவட்டம், பேட்டை - திருநெல்வேலி மாவட்டம், பொன்னமராவதி - புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் சிதம்பரம் - கடலூர் மாவட்டம்

## QUARTERS FOR FIRE & RESCUE SERVICE PERSONNEL

The Government of Tamil Nadu in its G.O. (MS) No.1026 Home (Police XVII) department dt.26.10.2006 accorded administrative and financial sanction for Rs.988.24 lakhs for construction of 200 quarters for Fire and Rescue Service personnel in the following places: Palladam,Tirupur and Udumalpet of Coimbatore district, Erode, Rajapalayam - Virudhunagar district, Kallakurichi - Villupuram district, Pennagaram - Dharmapuri district, Arani - Thiruvannamalai district, Ponneri - Thiruvallur district, Pettai - Tirunelveli district, Ponnamaravathy - Pudukottai district and Chidambaram - Cuddalore district

## Looking Good! DPO at Thiruvannamalai





### கட்டிடங்களில் பராமரிப்பு

பயன் பெறும் துறையினரிடம் கட்டிடங்கள் முடிக்கப்பெற்று ஒப்படைக்கப்பட்ட இடங்களுக்கு பார்வையிட சென்ற தருணத்தில் சில குடியிருப்பினர் வளாகத்தில் மரங்களை வளர்த்தும், சுத்தமாக வைத்திருக்க மிகுந்த அக்கறை காட்டுவதையும், பலர் அதனை உதாசீனப்படுத்துவதையும் கண்டோம். தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டப்படும் அனைத்து கட்டிடங்களும் காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத்துறையினரது மதிப்புள்ள சொத்தாகும். ஆகவே மூத்த அதிகாரிகள் கட்டிடங்களைப் பராமரிப்பதிலும், சுற்றுச்சூழலை காப்பதிலும் தனிக் கவனம் செலுத்த வலியுறுத்தப்படுகிறது.

மேலும் குடியிருப்புகள் மற்றும் கட்டிடங்களைப் பராமரிக்க ஆவலை துண்டும் வகையில் சிறப்பாக பராமரிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு விருது வழங்க ஆலோசிக்கலாம்.

கட்டிடங்களை சிறப்பாக பராமரிக்க தேவையான எல்லா உதவிகளையும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் வழங்க தயாராக உள்ளது.அதன் பங்கிற்கு சிற்றறிக்கையில் சிறப்பாக பராமரிக்கப்பட்ட வளாகத்தின் புகைப்படங்கள் பிரசுரிக்கப்படும். பராமரிப்பிற்கான சில குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### MAINTENANCE OF BUILDINGS

In the course of our visits to the sites already handed over to the departments after completing the construction, we have observed that while at some places immense interest has been taken by the occupants to maintain the buildings and improve the environs with plants etc., at many places these aspects have been neglected. Since all buildings constructed by the TNPHC such as offices and residences are permanent assets of the Police, Prisons and Fire Services departments, as the case may be, it is urged that senior officers take personal interest in the proper maintenance and upkeep of the buildings. They may consider instituting awards for the best maintained office, residential complex etc to stimulate competition for excellence in upkeep of the premises.

The TNPHC on its part will publish photographs of the well-maintained complexes in this bulletin and also extend all other help whenever required for the better maintenance of the buildings. Some tips for better maintenance are enumerated hereunder.

## கட்டிடங்களில் பராமரிப்பு முறைகள்

- கட்டிடத்தில் காணும் களையினை உடன் எடுக்கவும்.
- சன்சேடுகளில் குப்பை தேங்காமல் பார்க்கவும்.
- சன்சேடுகளில் குப்பை போடுவதை தவிர்க்கவும்.
- பூந்தொட்டிகளை சன்சேடுகளில் வைக்க வேண்டாம்.
- மேல் தளத்தில் குளிப்பது, துணிகள் துவைப்பது கூடாது.
- கழிவறை மற்றும் அடுப்பறை கழிவுக் குழாய்களில் உணவு சக்கைகள் மற்றும் திடப்பொருள்கள் செல்லாமல் பார்த்துக் கொள்ளவும்.
- கட்டிடம் மற்றும் குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை உடனுக்குடன் சீர் செய்யவும்.
- தண்ணீர் குழாய் மற்றும் வடிகால் குழாய்களை சீரமைக்க பயிற்சிபெற்ற பணியாளர்களிடம் ஒப்படைக்கவும்.
- குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை பீங்கானால் ஆன கழிவு பொருத்திகளின் வழியாக இரும்பு கம்பி கொண்டு நீக்க முயற்சிக்க வேண்டாம்.
- துணிகள் உலர்த்த குழாய்களில் கொடி கயிறு கட்டுவதைத் தவிர்க்கவும்.
- படிக்கட்டின் கீழும், வெற்றிடங்களிலும் உபயோகமற்ற பொருட்கள் சேர்ப்பதைத் தவிர்க்கவும்.
- தரை சேதமடைவதை தடுக்க நாற்காலிகளின் கால்களில் 'புஷ்' வைக்கவும்.
- தரமான மின் உபகரணங்களையும், மின் கருவிகளையும் மட்டும் உயோகிக்கவும்.

## TIPS FOR MAINTENANCE OF BUILDINGS

- Remove weeds found anywhere in the building immediately.
- Keep the sunshades free from garbage.
- Avoid littering on sunshades.
- Do not keep flower pots on sunshades.
- Do not bathe (or) wash clothes on terrace.
- Do not allow any solids or food refuses to drain through pipes fitted in bath (or) kitchen.
- Rectify any leakages either in building (or) pipes then and there.
- Always employ skilled person to attend to any plumbing, sanitary works.
- Do not attempt to clear blockages through ceramic sanitary fittings with steel rods.
- Avoid using pipes as props to tie ropes for drying clothes.
- Avoid accumulating unused materials under the stair case landing (or) in any other open space.
- Provide bush to furniture's leg to prevent damage to flooring.
- Use only standard electrical fittings, appliances and gadgets.

## நிதி கையாளுமை

கடந்த 31.03.2007 ஆம் ஆண்டின் முடிவில், ரூ.12053.00 இலட்சங்கள் பணிக்காக செலவுகள் செய்து மற்றொரு துடிப்பான வருடத்தினை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் கண்டது. 31.03.2007ஆம் ஆண்டின் முடிவில் வருமான வரிக்கழிவு போக ரூ.125.46 இலட்சங்கள் இலாபம் ஈட்டியது.

16.05.07 அன்று நடந்த இவ்வாரிய இயக்குனர்கள் கூட்டத்தில் அரசின் பங்கு தொகைக்கான ஈவுத்தொகை 50 % ( ரூ. 50 இலட்சங்கள் ) கொடுக்க உத்தேசித்துள்ளது. இதற்கான ஒப்புதல், 10.07.2007 அன்று நடைபெறவிருக்கும் ஆண்டு பொதுக் கூட்டத்தில் அளிக்கப்பட உள்ளது.

ரூ.100/- இலட்சங்கள் பங்குத் தொகையாகக் கொண்ட இக்கழகத்தின் சேமிப்பு நிதி நிலை 31.03.2007 ஆம் நாளில் ரூ.635 இலட்சங்கள் ஆகும்.

## FINANCIAL PERFORMANCE

TNPHC witnessed another vibrant year resulting in all time high works expenditure of Rs.12053.00 lakhs for the year ended 31.3.2007. The after tax profit for the year ended 31.3.2007 is Rs.125.46 lakhs. The Board of Directors in their meeting held on 16.5.2007 proposed a dividend of 50% (i.e. Rs.50.00 lakhs) on the share capital to the Government which will be approved in the ensuing Annual General Meeting to be held on 10.7.2007. The accumulated reserve position of TNPHC as on 31.3.2007 is Rs.635 lakhs against the share capital of Rs.100.00 lakhs

## கட்டுமான செயல்முறை கருத்தரங்கு

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் பொறியாளர்களுக்கான 'கட்டுமான செயல்முறை' என்ற தலைப்பில் பயிற்சி கருத்தரங்கு சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்களின் மையத்தில் இக்கழகத்தால் 27 மற்றும் 28 ஏப்ரல் 2007ல் நடத்தப்பட்டது.

இதில் பங்குபெற்ற 85 பொறியாளர்கள் பயன்பெறும் வகையில் பத்து பிரசித்தி பெற்ற பொறியாளர்கள் மற்றும் கல்வியாளர்கள், கட்டுமான செயல்முறை தொடர்புள்ள தலைப்புகளில் தெளிவான சொற்பொழிவாற்றியும், பங்கு பெற்றோருடன் அனுபவத்தை பகிர்ந்து கொண்டும் சிறப்பித்தார்கள். பங்கு பெற்ற பொறியாளர்களின் மதிப்பீட்டு அறிக்கைகள் இப்பயிற்சியின் வெற்றிக்கு அத்தாட்சியாகும். வருங்காலங்களிலும் இதுபோன்ற நிகழ்சிகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## SEMINAR ON CONSTRUCTION PRACTICES

TNPHC conducted the first ever workshop for its engineers on 27 & 28 April 2007 at Alumni Centre, Anna University, Chennai. The topic discussed was "CONSTRUCTION PRACTICES" Ten eminent engineers and academicians enlightened eighty five participants through their vivid lectures and interaction on topics associated with construction. The evaluation report of the participants endorsed the success of the workshop. Similar programmes are proposed to be conducted in future.


Er. S. Ramachandran
CE (Retd.) / PWD


Dr. S. Narashiman
EE (Retd.) / TNHB


Dr. L.S.Jayagopal
Prof (Retd.) PSG College


Dr. P. Devadoss Manoharan
Prof. / Anna University


Dr. M. Sekar Dean.
Anna University


**Tr. K.P.Jain, I.P.S., Chairman and Managing Director TNPHC Inaugurates the workshop**


**Tr. N. Ramaraj, GM (F&A) Distribute Certificates**


Er. A. Veerappan
CE (Retd.) / PWD


Er. K. Senathipathy
Geotec Consultants


Er. M. Kumar
CE / TNPHC


Er. K. Ramakrishnan
CE / Doshi Housing Pvt Ltd.


Er. T. Senthil Nayagam
SE (Retd.) / PWD



Mrs. Vasumathi S. Kumar being Welcomed



Prize distribution by Mrs. Varsha Jain

## மகளிர் தினம் நிகழ்சிகள்

மகளிர் தினம் மார்ச் 8, 2007ல் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழக அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. பெண் ஊழியர்களிடையே பல போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. இவ்விழாவில் திருமதி. வர்ஷா ஜெயின் மற்றும் திருமதி. வசுமதி எஸ்.குமார், தலைமை கண்காணிப்பு அதிகாரி, யுனைடட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிட். ஆகியோர் சிறப்பு பேச்சாளர்கள் ஆவர். இவ்விழாவின் நினைவாக இவ்வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

## ஆசிரியர் குழு

**திரு. மா. குமார்,** (தலைமை ஆசிரியர்)
தலைமை பொறியாளர். தொ.பே. 28364749

**திரு. ச. இராசசேகரன்,** (இணை ஆசிரியர்)
உ.நி.பொறியாளர், ISO & QC. தொ.பே. 28364761

## WOMEN'S DAY CELEBRATIONS

Women's Day was celebrated on 8th March 2007 in TNPHC Office. Various competitions among women employees were conducted and prizes distributed. Speakers on the occasion included Mrs. Varsha Jain and Mrs. Vasumathi.S.Kumar, Chief Vigilance Officer, United India Insurance Company Ltd., Chennai. Tree plantation in the premises of TNPHC was undertaken to mark the event.

## EDITORIAL TEAM

Tr. M. Kumar (Chief Editor)
Chief Engineer, Phone 28364749

Tr. S. Rajasekharan (Associate Editor)
Asst. Exe. Engineer, ISO&QC, Phone 28364761

**TAMIL NADU POLICE HOUSING CORPORATION LTD.**
(ISO 9001:2000 CERTIFIED COMPANY)
132, E.V.R Salai, Kilpauk, Chennai - 600 010.
E-mail id : tnphcl@eth.net | Website : www.tnphc.com